# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

## TNPSC -ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-IV (தொகுதி-IV பணிகள்)

**தேர்வு:** தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC)

**பாடம் :** தமிழ் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு

**பகுதி:** அலகு I: அயற்சொல் தமிழ்ச்சொல்

### உள்ளடக்கம்


**அயற்சொல் - தமிழ்ச்சொல்** ....... 2

**6 - 12 -ம் வகுப்பு புதிய புத்தகத்தில் உள்ள அயற்சொற்கள்** ....... 9

**6 - 12 -ம் வகுப்பு பழைய புத்தகத்தில் உள்ள அயற்சொற்கள்** ....... 12

**மாதிரி வினாக்கள் (புத்தக வினாக்கள்)** ....... 17

**முந்தைய ஆண்டு வினாக்கள்** ....... 19



**© Copyright**

The Department of Employment and Training has prepared the Competitive Exams study material in the form of e-content for the benefit of Competitive Exam aspirants and it is being uploaded in this Virtual Learning Portal. This e-content study material is the sole property of the Department of Employment and Training. No one (either an individual or an institution) is allowed to copy or reproduce the matter in any form. The trespassers will be prosecuted under the Indian Copyright Act. It is a cost-free service provided to the job seekers who are preparing for the Competitive Exams.

**Director,**

**Department of Employment and Training.**

## அயற்சொல் - தமிழ்ச்சொல்

பிற மொழிகளில் இருந்து தமிழில் கலந்துள்ள சொற்களை அயற்சொற்கள் (வடமொழி, ஆங்கிலம் போன்றவை) என்றும், அவற்றிற்கு இணையான தூய தமிழ்ச் சொற்களை தமிழ்ச்சொற்கள் என்றும் அழைக்கிறோம்.

வடமொழி போன்ற பிற மொழிகளில் இருந்து தமிழ் மொழியில் கலந்துள்ள சொற்களைத் தூய தமிழ்ச் சொல்லாக (தமிழாக்கம்) மாற்றுவதே இப்பாடப்பகுதியின் நோக்கமாகும்.

**பூ, வா, அறம், புத்தகம்** இச்சொற்களை நோக்குங்கள்.

இவற்றில் முதல் இரு சொற்கள் ஒரெழுத்தைக் கொண்டவை. அடுத்த இரண்டு சொற்களும் மூன்று, நான்கு எழுத்துகளைக் கொண்டவை. இவை அனைத்தும் பொருள் தருகின்றன.

இவ்வாறு ஓர் எழுத்து தனித்தும் ஒன்றிற்கும் மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்தும் வந்து பொருள் தருவது சொல் எனப்படும். மொழி, பதம், கிளவி என்பன சொல் என்னும் பொருள் தரும் வேறு சொற்களாகும்.

இலக்கண முறைப்படி பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் எனச் சொற்கள் நான்கு வகைப்படும் என்பதை முன் வகுப்பில் கற்றீர்கள். அதேபோல் இலக்கிய வகையில் சொற்களை இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

### இயற்சொல்

கடல், கப்பல், எழுதினான், படித்தான் ஆகிய சொற்களைக் கவனியுங்கள். இவற்றின் பொருள் இயல்பாகவே எளிதில் விளங்குகிறது. இவ்வாறு எளிதில் பொருள் விளங்கும் வகையில் அமைந்த சொற்கள் இயற்சொற்கள் எனப்படும். இயற்சொல் பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு வகையிலும் வரும்.

(எ.கா.)

| | |
|---|---|
| **மண், பொன்** | பெயர் இயற்சொல் |
| **நடந்தான், வந்தான்** | வினை இயற்சொல் |
| **அவனை, அவனால்** | இடை இயற்சொல் |

| | |
|---|---|
| **மாநகர்** | உரி இயற்சொல் |

**2. திரிசொல்**

கற்றவர்கள் மட்டும் பொருள் உணர்ந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ள சொற்கள் திரிசொற்கள் எனப்படும்.

**(எ. கா):** தத்தை, ஆழி, செப்பினான்

மேலே காட்டப்பட்டுள்ள சொற்கள் எளிதில் பொருள் புரிந்து கொள்ள இயலாத வகையில் வந்துள்ளன. கற்றவர்களால் பொருள் தெரிவிக்கப்பட்டால் மட்டுமே பொருள் விளங்கும் வகையில் உள்ளன:

- **தத்தை** → கிளி
- **ஆழி** → கடல்
- **செப்பினான்** → உரைத்தான்

திரிசொல் பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு வகையிலும் வரும்.

(எ.கா.)

| | |
|---|---|
| **அழுவம், வங்கம்** | **பெயர்த் திரிசொல்** |
| **இயம்பினான், பயின்றாள்** | வினைத் திரிசொல் |
| **அன்ன, மான** | இடைத் திரிசொல் |
| **கூர், கழி** | உரித் திரிசொல் |

**திரிசொல் வகைகள்**

திரிசொல் இரண்டு வகைப்படும். அவை:

- ஒரு பொருள் குறித்த பல திரிசொல்
- பல பொருள் குறித்த ஒரு திரிசொல் என்பவை ஆகும்.

**1. ஒரு பொருள் குறித்த பல திரிசொல்**

ஒரே பொருளைத் தரும் பல திரிசொற்கள் தமிழில் உள்ளன. அவை ஒரு பொருள் குறித்த பல திரிசொல் எனப்படும்.

**(எ.கா):** கமலம், கஞ்சம், முண்டகம், முளரி

இவை யாவும் **தாமரை** என்னும் ஒரே பொருளைக் குறிக்கும் பல திரிசொற்கள் ஆகும். இவை யாவும் பெயர்ச்சொற்கள். எனவே ஒரு பொருள் குறித்த பல பெயர்த் திரிசொற்கள் ஆகும்.

**(எ.கா):** செப்பினான், உரைத்தான், மொழிந்தான், இயம்பினான்

இவை யாவும் **சொன்னான்** என்னும் ஒரே பொருளைக் குறிக்கும் பல திரிசொற்கள் ஆகும். இவை யாவும் வினைச்சொற்கள். எனவே ஒரு பொருள் குறித்த பல வினைத் திரிசொற்கள் ஆகும்.

**2. பல பொருள் குறித்த ஒரு திரிசொல்**

பல பொருளைத் தரும் ஒரு திரிசொல்லும் தமிழில் உள்ளது. அது, பல பொருள் குறித்த ஒரு திரிசொல் எனப்படும்.

**(எ. கா) ஆவி:** இச்சொல்லுக்கு உயிர், பேய், மெல்லிய புகை முதலான பல பொருள்கள் உள்ளன. ஆவி என்பது பெயர்ச்சொல். எனவே இதைப் பலபொருள் குறித்த ஒரு பெயர்த் திரிசொல் என்கிறோம்.

**(எ. கா) வீசு:** இச்சொல்லுக்கு எறி, சிதறு, பரவச்செய், ஆட்டு முதலான பல பொருள்கள் உள்ளன. வீசு என்பது வினைச்சொல். எனவே இதைப் பல பொருள் குறித்த ஒரு வினைத் திரிசொல் என்கிறோம்.

**3. திசைச்சொல்**

தமிழ்நாட்டுக்கு அப்பால் உள்ள பிற பகுதிகளில் பேசப்படும் மொழிகளிலிருந்து வந்து தமிழ்மொழியில் கலந்து வரும் சொற்கள் திசைச் சொற்கள் எனப்படும். தமிழ்நாட்டுக்கு நான்கு திசைகளிலும் உள்ள பகுதிகளிலிருந்து தமிழ் மொழியில் வந்து வழங்கும் சொற்கள் திசைச் சொற்கள் எனப்படும்.

**(எ. கா):** ஆசாமி, சாவி

- இவற்றில் **ஆசாமி** என்னும் சொல் உருதுமொழிச் சொல்.
- **சாவி** என்னும் சொல் போர்த்துக்கீசிய மொழியில் உள்ள சொல்.

முற்காலத்தில் பாண்டிநாட்டைத் தவிர, தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் வழங்கிய கேணி(கிணறு), பெற்றம் (பசு) போன்ற சொற்களையும் திசைச்சொற்கள் என்றே வழங்கினர்.

**செந்தமிழ்நிலத்துடன் சேர்ந்த நாடுகளிலிருந்து வரும் சொற்கள்:**

| திசைச்சொல் | பொருள் | வட்டாரப் பகுதி |
|---|---|---|
| **பெற்றம்** | பசு | தென்பாண்டி நாட்டுச்சொல் |

| | | |
|---|---|---|
| **தள்ளை** | தாய் | குட்ட நாட்டுச்சொல் |
| **அச்சன்** | தந்தை | குடநாட்டுச்சொல் |
| **பாழி** | சிறுகுளம் | பூழிநாட்டுச்சொல் |

**தமிழ் மொழியில் வழங்கும் சில திசைச் சொற்களும் அவற்றின் தமிழ் வழக்கும்**

| திசைச்சொல் | தமிழ் வடிவம் | திசைச்சொல் | தமிழ் வடிவம் |
|---|---|---|---|
| **பண்டிகை** | திருவிழா | **வக்கீல்** | வழக்குரைஞர்/வழக்கறிஞர் |
| **கேணி** | கிணறு | **வியாபாரம்** | வாணிகம் |
| **அச்சன்** | தந்தை | **வேடிக்கை** | காட்சி |
| **ஆய்** | தாய் | **அசல்** | மூலம் |
| **பாழி** | சிறுகுளம் | **ஆசாமி** | ஆள் |
| **பந்தயம்** | பணயம் | **இலாகா** | துறை |
| **வெள்ளம்** | நன்னீர் | **மகசூல்** | விளைச்சல் |
| **சந்தா** | உறுப்பினர் கட்டணம் | **மைதானம்** | திடல் |
| **ஆஸ்பத்திரி** | மருத்துவ மனை | **தபால்** | அஞ்சல் |
| **ஜமக்காளம்** | விரிப்பு | **தயார்** | ஏற்பாடு |
| **நபர்** | ஆள் | **ஏராளம்** | மிகுதி |
| **புகார்** | முறையீடு | **சர்க்கார்** | அரசு |

| | | | |
|---|---|---|---|
| **சாவி** | திறவுகோல் | **வாய்தா** | தவணை முறை / நில வரி |
| **பெற்றம்** | பசு | **பாக்கி** | மிச்சம் |
| **தள்ளை** | தாய் | **சிப்பாய்** | போர் வீரன் |
| **சொன்றி** | சோறு | **கோர்ட்** | நீதி மன்றம் |
| **பட்டாளம்** | படைப் பிரிவு | **சிபாரிசு** | பரிந்துரை |
| **அல்வா** | இனிப்புக் களி | **பந்தோபஸ்து** | பாதுகாப்பு |
| **கடுதாசி** | எழுதும் தாள் | **சன்னல்** | காலதர் |
| **வாடிக்கை** | வழக்கம் | **குசினி** | சமையலறை |

செந்தமிழ் நிலம் சேர் பன்னிரு நிலத்தினும்

ஒன்பதிற்று இரண்டினில் தமிழொழி நிலத்தினும்

தம் குறிப்பினவே திசைச் சொல் என்ப **(நன்னூல்: 273)**

**சில திசைச் சொற்களின் பட்டியல் அவற்றின் நாடுகள்**

| **திசைச்சொல்** | **மொழி** | **தமிழ்** |
|---|---|---|
| **கெட்டி** | தெலுங்கு | உறுதி |
| **தெம்பு** | தெலுங்கு | ஊக்கம் |
| **பண்டிகை** | தெலுங்கு | விழா |
| **வாடகை** | தெலுங்கு | குடிக்கூலி |
| **எச்சரிக்கை** | தெலுங்கு | முன் அறிவிப்பு |

| | | |
|---|---|---|
| **அசல்** | உருது | முதல் |
| **அனாமத்து** | உருது | கணக்கில் இல்லாதது |
| **இனாம்** | உருது | நன்கொடை |
| **இலாகா** | உருது | துறை |
| **சலாம்** | உருது | வணக்கம் |
| **சாமான்** | உருது | பொருள் |
| **சவால்** | உருது | அறைகூவல் |
| **கம்மி** | பாரசீகம் | குறைவு |
| **கிஸ்தி** | பாரசீகம் | வரி |
| **குஸ்தி** | பாரசீகம் | குத்துச்சண்டை |
| **சரகம்** | பாரசீகம் | எல்லை |
| **சுமார்** | பாரசீகம் | ஏறக்குறைய |
| **தயார்** | பாரசீகம் | ஆயத்தம் |
| **பட்டா** | பாரசீகம் | உரிமை |
| **டாக்டர்** | ஆங்கிலம் | மருத்துவர் |
| **நைட்** | ஆங்கிலம் | இரவு |
| **பஸ்** | ஆங்கிலம் | பேருந்து |

**திசைச்சொற்கள்**

| திசைச்சொல் | மொழி | திசைச்சொல் | மொழி |
|---|---|---|---|
| **குல்லா** | பார்ஸி | **இனாம்** | உருது |
| **ரிக்ஷா** | ஜப்பானி | **ரூபாய்** | இந்துஸ்தானி |
| **பஜார்** | பார்ஸி | **ஜாஸ்தி** | உருது |
| **அலமாரி** | போர்ச்சுக்கீசியம் | **துட்டு** | டச்சு |
| **எக்கச்சக்கம்** | தெலுங்கு | **பீரோ** | பிரெஞ்சு |
| **நபர்** | அரபி | **கடுதாசி** | போர்ச்சுக்கீசியம் |
| **பேனா** | போர்ச்சுக்கீசியம் | | |

**4. வடசொல்**

வருடம், மாதம், கமலம், விடம், சக்கரம் முதலிய சொற்கள் தமிழில் வழக்கில் இருந்தாலும் இவை தமிழ்ச்சொற்கள் அல்ல. இவை வடமொழி எனப்படும் சமஸ்கிருத மொழிச்சொற்கள் ஆகும். இவ்வாறு வடமொழியிலிருந்து வந்து தமிழில் இடம்பெறும் சொற்கள் வடசொற்கள் எனப்படும்.

வடசொற்களைத் தற்சமம், தற்பவம் என இருவகையாகப் பிரிப்பர்.

**1. தற்சமம்**

வடமொழிச் சொற்கள் தமிழ்மொழியில் தமிழ்ச் சொற்கள் போன்றே மாற்றமின்றி வருவது தற்சமம் எனப்படும்.

- **(எ. கா):** கமலம், காரணம், மேரு

இச்சொற்களில் வடமொழிக்குரிய சிறப்பு எழுத்து எதுவும் இல்லை. இவற்றில் தமிழ் எழுத்துகளே இடம் பெற்றுள்ளன. எனவே இச்சொற்கள் தற்சமம் என்று அழைக்கப்படுகின்றன.

**2. தற்பவம்**

வட மொழிக்குரிய சிறப்பு எழுத்துகள் தமிழ்த் தன்மைக்கு ஏற்ப மாறி வருவது தற்பவம் எனப்படும். இவற்றில் வடமொழிக்கே உரிய ஒலிப்புகளைக் கொண்ட எழுத்துகள் தமிழ் மொழிக்கு ஏற்ப மாறி வந்துள்ளன.

| வடமொழி வடிவம் | தமிழ்மாற்ற வடிவம் (தற்பவம்) |
|---|---|
| **பங்கஜம்** | பங்கயம் |
| **ரிஷபம்** | இடபம் |
| **ஹரி** | அரி |
| **பக்ஷி** | பட்சி |
| **சரஸ்வதி** | சரசுவதி |
| **வருஷம்** | வருடம் |

இவற்றில் வடமொழிக்கே உரிய ஒலிப்புகளைக் கொண்ட எழுத்துகள் தமிழ் மொழிக்கு ஏற்ப மாறி வந்துள்ளன. எனவே தற்பவம் என்று அழைக்கப்படுகின்றன.

### 6 - 12 -ம் வகுப்பு புதிய புத்தகத்தில் உள்ள அயற்சொற்கள்

| பிறமொழிச் சொல் | தமிழாக்கம் | பிறமொழிச் சொல் | தமிழாக்கம் |
|---|---|---|---|
| **நிருபர்** | செய்தியாளர் | சித்திரம் | ஓவியம் |
| **தேசம்** | நாடு | ஜாமின் | பிணை |
| **வாசகர்** | படிப்பவர் | சந்ததி | வழித்தோன்றல் |
| **விமர்சனம்** | திறனாய்வு | பிரசுரித்தல் | வெளியிடுதல் |
| **பத்திரிகை** | இதழ் | உத்தேசம் | கருதுகை |

| | | | |
|---|---|---|---|
| **சுதந்திரம்** | விடுதலை | தீர்மானம் | முடிவு |
| **ஆச்சர்யம்** | வியப்பு | அபிவிருத்தி | மிகு வளர்ச்சி |
| **பரிவாரங்கள்** | உறவினர்கள் | வருடம் | ஆண்டு |
| **விஞ்ஞானம்** | அறிவியல் | மாதம் | திங்கள் |
| **வசூல்** | தண்டல் | கமலம் | தாமரை |
| **விஷம்** | நஞ்சு | ஞாபகம் | நினைவு |
| **சத்திரம்** | விடுதி, மடம் | வருடம் | ஆண்டு |
| **இரத்தம்** | குருதி | தேசம் | நாடு |
| **அச்சன்** | தந்தை | வித்தியாசம் | வேறுபாடு |
| **விஞ்ஞானம்** | அறிவியல் | சந்தோஷம் | மகிழ்ச்சி |
| **பரீட்சை** | தேர்வு | விபரம் | நடைமுறை விளக்கம் |
| **லட்சியம்** | குறிக்கோள் | பாஸ்போர்ட் | கடவுச்சீட்டு |
| **அதிபர்** | தலைவர் | கம்ப்யூட்டர் | கணினி |
| **ஆச்சரியம்** | வியப்பு | பத்திரிகை | செய்தித்தாள், ஏடு |
| **ஆரம்பம்** | தொடக்கம் | கோரிக்கை | வேண்டுகோள் |
| **சதம்** | நூறு | யுகம் | தலைமுறை |
| **அபாயம்** | இடர் | ராஜ்ஜியம் | நாடு |

| | | | |
|---|---|---|---|
| **தேகம்** | மேனி, உடல் | சரித்திரம் | வரலாறு |
| **சரித்திரம்** | வரலாறு | முக்கியத்துவம் | இன்றியமையாமை |
| **சத்தம்** | ஓசை, ஒலி, இரைச்சல் | சொந்தம் | உறவு |
| **ஆதி** | தோற்றம் | சமயம் | அண்ணல்மடி / காலம் |
| **உத்திரவு** | கட்டளை | திருமணம் | மங்கலம் |
| **தினம்** | நாள் | சன்மார்க்கம் | நன்னெறி |
| **சந்தோசம்** | மகிழ்ச்சி | விசித்திரமான சபை | விந்தையானதோர் மன்றம் |
| **திதி** | சமையல் | சக்ரவர்த்தி | அரசர் |
| **அவிட்டம்** | மினையாகிய காட்டி, கொள்ளெடுத்தல் | சம்பளம் | ஊதியம் |
| **வாடகை** | குடிக்கூலி | ஈனம் | இழிகுடி |
| **மாதம்** | திங்கள் | மாலை | பொழுதின்தோற்றம் |
| **போலீஸ்** | காவல்துறை | பிரபஞ்சம் | பேரண்டம் |
| **நிச்சயம்** | உறுதி | நிருபர்கள் | செய்தியாளர்கள் |
| **உத்திராட்சம்** | வாக்குறுதி | தினந்தோறும் | நாள்தோறும் |
| **சந்தோஷம்** | மகிழ்ச்சி | விநியோகஸ்தர்கள் | சேர்ப்புப்பணியாளர் |

| | | | |
|---|---|---|---|
| **சம்பளம்** | ஊதியம் | | |

### 6 - 12 -ம் வகுப்பு பழைய புத்தகத்தில் உள்ள அயற்சொற்கள்

| பிறமொழிச் சொல் | தமிழாக்கம் | பிறமொழிச் சொல் | தமிழாக்கம் |
|---|---|---|---|
| **அகிலம்** | உலகம் | **கிரீடம்** | மணிமுடி |
| **அனுமதி** | இசைவு | **ஈசன்** | இறைவன் |
| **உபயம்** | திருப்பணியாளர் கொடை | **குபேரன்** | பெருஞ்செல்வன் |
| **ஆதவன்** | ஞாயிறு | **உபசரித்தல்** | விருந்தோம்பல் |
| **உஷார்** | விழிப்பு | **அந்தஸ்து** | தகுதிநிலை |
| **ஆரம்பம்** | தொடக்கம் | **அக்கிரமம்** | துன்புறுத்தல் |
| **எதார்த்தம்** | இயல்பு | **பட்சி** | பறவை |
| **ஆஸ்தி** | சொத்து | **அபிஷேகம்** | திருமுழுக்கு |
| **ஐதிகம்** | உலக வழக்கு | **அதிசயம்** | வியப்பு |
| **இம்சை** | துன்பம் | **அம்பிகை** | தாய் |
| **காகிதம்** | தாள் | **புஷ்பம்** | மலர் |
| **இருதயம்** | நெஞ்சகம் | **கண்திருஷ்டி** | கண்ணேறு |
| **தர்மம்** | நல்வழியில் நடத்தல், கொடையளித்தல் | **பஜார்** | கடைத்தெரு |

| | | | |
|---|---|---|---|
| **நிர்வாகி** | பொறுப்பாளர் | **உத்தியோகம்** | அலுவல் |
| **காரியம்** | வினைப்பயன் | **அங்கத்தினர்** | உறுப்பினர் |
| **வர்ணித்தல்** | புனைந்துரைத்தல் | **அதிகாரி** | அலுவலர் |
| **வர்ணம்** | நிறம் | **அதிபர்** | தலைவர் |
| **சர்ப்பம்** | பாம்பு | **அந்நியர்** | அயலார் |
| **அர்த்தம்** | பொருள் | **அபிஷேகம்** | குடமுழுக்கு |
| **அந்தக்கரணம்** | உள்ளுணர்வு | **ஆயுள்** | முதுமை |
| **கவலை** | தொல்லை | **அர்த்தம்** | பொருள் |
| **ரிக்ஷா** | ஊர்தி | **அலங்காரம்** | ஒப்பனை |
| **பஜார்** | கடைவீதி | **அவசரம்** | விரைவு |
| **அலமாரி** | அடுக்குப்பெட்டி | **அனுமதி** | இசைவு |
| **எக்கச்சக்கம்** | தேவைக்கு அதிகமான அளவு | **அமசம்** | பகுதி |
| **நபர்** | ஆள், பேர் | **ஆபத்து** | இடர் |
| **பேனா** | எழுதுகோல் | **ஆரம்பம்** | தொடக்கம் |
| **இனாம்** | நன்கொடை | **ஆராதனை** | வழிபாடு |
| **ஜாஸ்தி** | மிகுதி | **இருதயம்** | நெஞ்சு |
| **துட்டு** | பணம் | **உத்தரவு** | கட்டளை |

| | | | |
|---|---|---|---|
| **பீரோ** | பேழை | **உபயோகம்** | பயன் |
| **கடுதாசி** | மடல் | **உவச்சம்** | ஊக்கம் |
| **சாதாரணமாக** | தடையின்றி | **கலகம்** | பூசல் |
| **நிச்சயமாக** | உறுதியாக | **கிராமம்** | சிற்றூர் |
| **மாமூல்** | வழக்கம் | **குமாரன்** | புதல்வன் |
| **நாஷ்டா** | காலை உணவு | **கோபம்** | சினம் |
| **ரத்து** | நீக்கம் | **விஞ்ஞானம்** | அறிவியல் |
| **பைசல் செய்** | தீர்த்து வை | **விவாதம்** | சொற்போர் |
| **ஜனங்கள்** | மக்கள் | **சாவி** | திறவுகோல் |
| **ஜில்லா** | மாவட்டம் | **சந்தா** | கட்டணம் |
| **கஜானா** | கருவூலம் | **பதில்** | விடை |
| **சர்க்கார்** | அரசு | **ஜாதி** | இனம் |
| **அமல்** | நடைமுறை | **சங்கம்** | மன்றம் |
| **உபந்நியாசம்** | சமயச் சொற்பொழிவு | **சந்தேகம்** | ஐயம் |
| **பந்துமித்ரர்** | சுற்றம், நட்பு | **சபதம்** | சூளுரை |
| **ஆசீர்வதித்தல்** | வாழ்த்துதல் | **சரித்திரம்** | வரலாறு |
| **பஜனை** | கூட்டு வழிபாடு | **சாதம்** | சோறு |

| | | | |
|---|---|---|---|
| **நமஸ்காரம்** | வணக்கம் | **சிகிச்சை** | மருத்துவம் |
| **கோஷ்டி** | கூட்டம் | **சித்திரம்** | ஓவியம் |
| **குமாஸ்தா** | எழுத்தர் | **சின்னம்** | அடையாளம் |
| **சம்பிரதாயம்** | மரபு | **தினசரி** | நாள்தோறும் |
| **தாலுகா ஆபீஸ்** | வட்டாட்சியர் அலுவலகம் | **தீபம்** | விளக்கு |
| **நிபுணர்** | வல்லுநர் | **நாயகன்** | தலைவன் |
| **பயம்** | அச்சம் | **கிராமம்** | சிற்றூர் |
| **பரீட்சை** | தேர்வு | **கைதி** | சிறையாளி |
| **பிரச்சினை** | சிக்கல் | **சபை** | அவை |
| **புத்தி** | அறிவு | **சாதம்** | சோறு |
| **போதனை** | கற்பித்தல் | **சிபாரிசு** | பரிந்துரை |
| **மந்திரி** | அமைச்சர் | **சேவை** | தொண்டு |
| **முக்கியம்** | முதன்மை | **ஜாக்கிரதை** | விழிப்பு |
| **விநாடி** | நொடி | **தகவல்** | செய்தி |
| **வேதம்** | மறை | **தினம்** | நாள் |
| **காகிதம்** | தாள் | **நிபுணர்** | வல்லுநர் |
| **அசல்** | முதல் | **பத்திரிகை** | செய்திதாள் |

| | | | |
|---|---|---|---|
| **அபாயம்** | பேரிடர் | **பூஜை** | வழிபாடு |
| **அனுபவம்** | பட்டறிவு | **பேட்டி** | நேர்காணல் |
| **ஆயுள்** | வாழ்நாள் | **விகுதி** | திருநீறு |
| **உபாத்தியாயர்** | ஆசிரியர் | **விவாதம்** | உரையாடல் |
| **கர்வம்** | செருக்கு | **வைத்தியர்** | மருத்துவர் |
| | | **சிபாரிசு** | பரிந்துரை |

**தமிழ் ஊர்ப்பெயர்கள் வடமொழி ஊர்ப்பெயர்கள்**

| தமிழ் வடிவம் | வடமொழி வடிவம் |
|---|---|
| **திருவரங்கம்** | ஸ்ரீரங்கம் |
| **திருச்சிற்றம்பலம்** | சிதம்பரம் |
| **திருமறைக்காடு** | வேதாரணியம் |
| **திருமுதுகுன்றம், பழமலை** | விருத்தாசலம் |
| **அங்கயற்கண்ணி** | மீனாட்சி |
| **அறம்வளர்த்தாள்** | தர்மசம்வர்த்தனி |
| **எரிசினக் கொற்றவை** | ரௌத்திர துர்க்கை |
| **ஐயாறப்பர்** | பஞ்சநதீசுவரர் |
| **குடமூக்கு** | கும்பகோணம் |

| | |
|---|---|
| **வாள்நெடுங்கண்ணி** | கட்கநேத்ரி |
| **செம்பொன் பள்ளியார்** | சொர்ணபுரீச்சுரர் |
| **நீள்நெடுங்கண்ணி** | விசாலாட்சி |
| **யாழினும் நன்மொழியாள்** | வீணாமதுரபாஷிணி |
| **தேன்மொழிப்பாவை** | மதுரவசனி |
| **மயிலைமலைநாதர்** | விருத்தகிரீச்சுரர் |

## மாதிரி வினாக்கள் (புத்தக வினாக்கள்)

**கீழ்க்காணும் பிறமொழிச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச்சொற்கள் எழுதுக.**

1. அபிஷேகம் – திருமுழுக்கு
2. போஸ்ட் ஆபீஸ் – அஞ்சலகம்
3. ஆஸ்தி – சொத்து
4. போலீஸ் ஸ்டேஷன் – காவல் நிலையம்
5. உத்தியோகஸ்தர் – பணியாளர்
6. அபூர்வம் – அரிது
7. விஷயம் – செய்தி / காரியம் / வேலை
8. சாதம் – சோறு
9. ஹாஸ்டல் – விடுதி
10. சிபாரிசு – பரிந்துரை

**கீழ்க்காணும் திசைச்சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களைப் பொருத்துக.**

| திசைச்சொல் | தமிழ்ச்சொல் |
|---|---|
| a. பண்டிகை | - 1. மூலம் |
| b. வெள்ளம் | - 2. வணிகம் |

| | |
|---|---|
| c. வியாபாரம் | - 3. விரிப்பு |
| d. அசல் | - 4. திருவிழா |
| e. அச்சன் | - 5. காட்சி |
| f. ஜமக்காளம் | - 6. நீர்ப் பெருக்கு |
| g. வேடிக்கை | - 7. தந்தை |

**விடை:** 4, 6, 2, 1, 7, 3, 5

**பிறமொழிச்சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.**

1. க்ஷேத்திரங்கள்தோறும் சென்று விக்கிரகங்களை வழிபடுக.
   **விடை:** ஒவ்வொரு புண்ணிய தலங்களுக்கும் சென்று தெய்வ திருவுருவங்களை (சிலைகளை) வழிபடுக.
2. இம்மார்க்கத்தில் யாத்திரை செல்லுங்கள்.
   **விடை:** இவ்வழியில் பயணம் செல்லுங்கள்.

**கீழ்க்காணும் தொடர்களில் உள்ள பிறமொழிச் சொற்களைக் கண்டறிந்து எழுதுக.**

*(தனிக்குறிலை அடுத்து ரகர ஒற்று (ர்) வந்தால் அது பிறமொழிச் சொல்)*

1. **அர்ச்சுனன்** வில் வித்தையில் சிறந்தவன் ஆவான்.
2. '**தர்மம்** தலைகாக்கும்' என்பது பழமொழி.
3. சிறந்த **நிர்வாகி** எனப் பாரிவேந்தனை அனைவரும் பாராட்டினர்.
4. **கற்பூரம்** ஏற்றி இறைவனை வழிபடுவது இயல்பு.
5. 'எண்ணித் துணிக **கர்மம்**' என்பது வள்ளுவர் வாக்கு.
6. சுற்றுலாவில் தான் கண்ட இயற்கைக் காட்சிகளைக் கலையரசி **வர்ணித்துக்** கூறினாள்.
7. புதிதாகக் கட்டப்பட்ட அந்த வீட்டிற்கு நேற்றுத்தான் **வர்ணம்** பூசப்பட்டது.
8. **சர்ப்பத்தினைக்** கண்டதும், கீரிப்பிள்ளை அதனைத் தாக்க முற்பட்டது.
9. நீ பேசுவதின் **அர்த்தம்** எனக்குப் புரியவில்லை.
10. தாய், தன் குழந்தைக்காகக் கோவிலில் **அர்ச்சனை** செய்து இறைவனை வழிபட்டான்.

**பிறமொழிச் சொற்களை நீக்கி அவற்றிற்குரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.**

1. இந்த வேலையில் சேர என்ன அர்ஹதை உள்ளது?

**விடை:** இந்த வேலையில் சேர என்ன தகுதி உள்ளது?

2. கொடுங்கோல் அரசன் அதர்மம் செய்தான்.
   **விடை:** கொடுங்கோல் அரசன் கொடுமை செய்தான்.
3. ஆகாயத்தில் பட்சி பறந்தது.
   **விடை:** வானத்தில் பறவை பறந்தது.
4. புஷ்பமின்றி, அபிஷேகம் உண்டா?
   **விடை:** மலரின்றி திருமுழுக்கு உண்டா?
5. குழந்தைக்குக் கண் திருஷ்டி சுற்றிப்போடு.
   **விடை:** குழந்தைக்குக் கண்ணேறு சுற்றிப்போடு.

## முந்தைய ஆண்டு வினாக்கள்

**1. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்கள்: (ATOGS/2023)**

வான்வெளியில் ஏற்பட்ட நிகழ்வைக் கண்டு **ஆச்சரியம்** அடைந்தனர்.

அ) புரிப்பு

ஆ) எச்சரிப்பு

இ) வியப்பு

ஈ) மகிழ்ச்சி

**விடை:** இ) வியப்பு

**விளக்கம்:** "ஆச்சரியம்" என்பது வடமொழிச் சொல் (பிறமொழிச் சொல்). அதற்கு இணையான தூய தமிழ்ச்சொல் "வியப்பு" அல்லது "மலைப்பு" ஆகும்.

**2. பிறமொழிச் சொற்கள் கலந்த தொடரைக் கண்டறிக. (CTNGS/2024)**

அ) ஏழு மின் விசிறிகள் உள்ளன

ஆ) அதிகாரிகள் உத்தரவு போட்டனர்

இ) தங்கக் கட்டிகள் உள்ளனவா?

ஈ) எழுதுகோல்கள் வாங்கி வா

**விடை:** ஆ) அதிகாரிகள் உத்தரவு போட்டனர்

**விளக்கம்:** இத்தொடரில் "உத்தரவு" (ஆணை என்பது தமிழ்ச்சொல்) என்பது பிறமொழிச் சொல் ஆகும். மற்ற தொடர்களில் உள்ள சொற்கள் அனைத்தும் தூய தமிழ்ச்சொற்கள்.

**3. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்கள்: (CASEGS/2024)**

அறிவியல் அறிஞர்கள் **சரித்திரம்** படைத்தனர்

அ) விஞ்ஞானம்

ஆ) வரலாறு

இ) இணையம்

ஈ) மின்னணு

**விடை:** ஆ) வரலாறு

**விளக்கம்:** "சரித்திரம்" என்பது பிறமொழிச் சொல். இதன் சரியான தமிழ்ச்சொல் "வரலாறு" ஆகும். (விருப்பம் 'அ'-வில் உள்ள விஞ்ஞானம் என்பதும் பிறமொழிச் சொல்லே, அதன் தமிழ்ச்சொல் அறிவியல்).

**4. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களைக் கண்டறிக. (BEGS/2023)**

**கப்பித்தான்**

அ) கருமி

ஆ) தலைமை மாலுமி

இ) சேமிப்பவர்

ஈ) சிறை வாசம்

**விடை:** ஆ) தலைமை மாலுமி

**விளக்கம்:** "கப்பித்தான்" (Captain) என்பது ஆங்கிலச் சொல்லின் தமிழ் ஒலிவடிவம் அல்லது பிறமொழிச் சொல் ஆகும். கப்பலை வழிநடத்தும் பொறுப்பில் உள்ளவரைக் குறிக்கும் தமிழ்ச்சொல் "தலைமை மாலுமி" அல்லது "கப்பல் தலைவர்" ஆகும்.

**5. இணையான தமிழ்ஞ் சொல்லைக் கண்டறிக. (MIGS/2023)**

**சதம்**

அ) பத்து

ஆ) ஆயிரம்

இ) நூறு

ஈ) லட்சம்

**விடை:** இ) நூறு

**விளக்கம்:** "சதம்" என்பது வடமொழிச் சொல். நூறு (100) என்ற எண்ணிக்கையைக் குறிக்கும் சரியான தமிழ்ச்சொல் "நூறு" ஆகும்.

**6. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களைக் கண்டறிதல் (IFGS/2023), (RAMGS/2023)**

**சந்தோஷம்**

அ) துன்பம்

ஆ) மகிழ்ச்சி

இ) வருத்தம்

ஈ) அமைதி

**விடை:** ஆ) மகிழ்ச்சி

**விளக்கம்:** "சந்தோஷம்" என்ற வடமொழிச் சொல்லிற்கு இணையான தூய தமிழ்ச்சொல் "மகிழ்ச்சி" ஆகும்.

**7. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களைக் கண்டறிதல். (BEGS/2023)**

**சாவி**

அ) திறவுகோல்

ஆ) பூட்டு

இ) கதவு

ஈ) சன்னல்

**விடை:** அ) திறவுகோல்

**விளக்கம்:** "சாவி" என்பது போர்த்துகீசிய மொழிச் சொல் (Chave). இதற்கு இணையான தூய தமிழ்ச்சொல் "திறவுகோல்" ஆகும்.

**8. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களைக் கண்டறிதல். சரியான இணையைத் தேர்ந்தெடு. (AOGS/2023)**

அ) ஐதிகம் - ஜாதகம்

ஆ) ஐதிகம் - உலக வழக்கு

இ) ஐதிகம் - ஐவர்

ஈ) ஐதிகம் - உலக போக்கு

**விடை:** ஆ) ஐதிகம் - உலக வழக்கு

**விளக்கம்:** "ஐதிகம்" என்ற வடமொழிச் சொல்லின் பொருள் "உலக வழக்கு" அல்லது "தொன்றுதொட்டு வரும் நம்பிக்கை" என்பதாகும். எனவே 'உலக வழக்கு' என்பதே சரியான இணை.

**9. பிறமொழிச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லைக் கண்டறிக (REGS/2022)**

**சர்க்கார்**

அ) அரசாங்கம்

ஆ) அரவை

இ) ஜனநாயகம்

ஈ) ஆஸ்பத்திரி

**விடை:** அ) அரசாங்கம்

**விளக்கம்:** "சர்க்கார்" என்பது உருது/பாரசீக மொழிச் சொல். அதன் சரியான தமிழ்ச்சொல் "அரசாங்கம்" அல்லது "அரசு" ஆகும்.

**10. தவறானவற்றைத் கண்டறிக. (RAMGS/2023)**

அ) இம்சை - துன்பம்

ஆ) ஆரம்பம் - தொடக்கம்

இ) உபயம் - விருந்தோம்பல்

ஈ) எதார்த்தம் - இயல்பு

**விடை:** இ) உபயம் - விருந்தோம்பல்

**விளக்கம்:** "உபயம்" என்ற பிறமொழிச் சொல்லின் பொருள் "கொடை" அல்லது "நன்கொடை" (இருவர் அல்லது இருபக்கமும் குறிக்கும்). விருந்தோம்பல் என்பதன் பிறமொழிச் சொல் "உபசரித்தல்" ஆகும். எனவே இணைகளில் இது தவறானது. மற்றவை அனைத்தும் சரியான பொருள்கள்.